# இபலோகம பிரதேச சபை

# அனுராதபுரம் மாவட்டம்

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2013 மார்ச் 27 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2012 மார்ச் 28 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2013 ஒக்தோபர் 24 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

எனது பரிசோதனைகளிலிருந்து தென்படுவதும் எனக்கு வழங்கப்பட்ட சிறந்த தகவல்கள் மற்றும் விளக்கங்களுக்கமைய, இபலோகம பிரதேச சபை 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான முறையான கணக்குப் பதிவேடுகளை பேணியிருந்தது என்றும், எனது அறிக்கையில் காட்டப்பட்டுள்ள விடயங்களால் நிதிக்கூற்றுக்களுக்கு ஏற்படும் தாக்கங்களை தவிர, 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இபலோகம பிரதேச சபையின் நிலைவரத்தையும், அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்பாட்டு நிதி விளைவுகளையும் காசோட்டத்தையும் உண்மையாகவும், நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தும் விதத்தில் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டிருந்தன என நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

சபைக்குச் சொந்தமான வாகனங்களின் கூட்டுப்பெறுமதி ரூபா 1,800,000 தொகை கணக்குகளிலிருந்து கைவிடப்பட்டிருந்தது.

### 1.3.2 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 87,257,651 கூட்டுத்தொகையான 05 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த/மெய்மையாய்வு செய்ய முடியாதிருந்தது.

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 772,974 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 4,652,111 ஆக இருந்தது.

### 2.2 நிதிக் கட்டுப்பாடு

பின்வரும் நிதிக்கட்டுப்பாட்டு குறைபாடுகள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) 1988 இன் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிருவாகம்) விதி இல. 99 இன் ஏற்பாடுகளுக்கு முரணாக ரூபா 4,862,673 கூட்டுத்தொகையான 79 கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்களுக்காக உறுதிப்படுத்தப்படாமல் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) இலங்கைக் குடியரசின் நிதிப் பிரமாணம் 237(அ) மற்றும் (ஆ) இன் பிரகாரம் களஞ்சிய வழங்கலுக்கான கொடுப்பனவுகளைச் செய்யும் பொது உரிய பொருட்கள் உடன்படிக்கையின் பிரகாரம் குறிப்பிட்ட தரத்தில் களஞ்சியத்திற்கு கிடைத்தமைக்கு களஞ்சியப் பொறுப்பு உத்தியோகத்தரினால் சான்றிதழ் வழங்க வேண்டியிருந்த போதிலும் 11 சந்தர்ப்பங்களின் போது ரூபா 161,775 கூட்டுத்தொகையான களஞ்சிய வழங்கல் தொடர்பாக அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.3 வருமான நிருவாகம்

### 2.3.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரினால் மீளாய்வாண்டின் பொருட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளவாறானது | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா (000) | ரூபா (000) | ரூபா (000) |
| (i) | வீதவரியும் வரியும் | 532 | 371 | 161 |
| (ii) | வாடகை | 2,000 | 1,554 | 447 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 590 | 561 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 9,671 | 10,280 | 406 |

### 2.3.2 வாடகை

சபைக்குச் சொந்தமான 70 கடைகளுக்காக மதிப்பீடு செய்யப்பட்ட தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்காமையினால் ரூபா 1,513,800 தொகையான வாடகை வருமானம் இழக்கப்பட்டிருந்தது.

### 2.3.3 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத் தரப்பினரிடமிருந்தும் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்கவேண்டிய தொகை தொடர்பான விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | ரூபா |
|---|---|---|
| (i) | நீதிமன்ற தண்டப்பணம் | 1,084,697 |
| (ii) | முத்திரைக் கட்டணம் | 1,935,570 |

**2.4 செயற்பாடற்ற மற்றும் குறைவான பயன்பாடுடைய பௌதீக வளங்கள்**

வடமத்திய மாகாண பிரதம அமைச்சிலிருந்து 2008 ஆண்டின் போது கிடைத்த ரூபா 776,500 பெறுமதியான அரிசி மாவை அண்மித்த பேக்கிரி உற்பத்தி உபகரணங்கள் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமல் செயற்பாடற்றுக் காணப்பட்டது.

**2.5 ஒப்பந்த நிருவாகம்**

2006 இன் அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 5.4.4(i) ஆம் பந்தியின் ஏற்பாடுகளுக்கு முரணாக ஒப்பந்தத்திற்காக 20 சதவீத எல்லையை விஞ்சி ரூபா 150,000 முற்பணமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

**2.6 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

(அ) சபைக்குரிய 03 கடைகள் வாழ்வதற்கான வீடாகப் பயன்படுத்தப்பட்டுக் கொண்டிருந்ததுடன் 10 கடைகள் உப வாடகைக்கு வழங்கப்பட்டிருந்தது. மேலும் 08 கடைகள் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமல் மூடப்பட்டிருந்தது.

(ஆ) எதிர்வரும் வருடங்களின் செயற்பாடுகளுக்குரிய திட்டங்களை உள்ளடக்கி கூட்டிணைந்த திட்டமும் அமுல்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்ட செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்கான செயல்நடவடிக்கைத் திட்டமும் தயாரிக்கப்பட்டு அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**3. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) உள்ளகக் கணக்காய்வு
(இ) வருமான நிருவாகம்